# தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம்

நிர்வாகக் கிளை
என்.பி.கே.ஆர்.ஆர் மாளிகை,
எண்.144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

**குறிப்பாணை எண்.032324/ஜி52/ஜி521/2024, நாள். 22.10.2024.**

பொருள் : நிர்வாகம் - மூன்றாம் பணிநிலை - கணக்கீட்டாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவி மாற்றம் - அறிவுறுத்தல் வழங்கப்படுவது – தொடர்பாக.

பார்வை : 1) (Per.) B.P.No.110, CMD TANCEDCO (Adm. Branch), dated 03.11.2018. (in Tamil)
2) B.P. (Per.) (CMD) TANGEDCO Proceedings No.72, Dated: 23.11.2021.

*****

பார்வை (1)-ல் காணும் வாரிய செயல்முறை ஆணையில் 40 வயதினை பூர்த்தி செய்தும் மற்றும் பட்டப்படிப்பு (10, +2, மற்றும் பட்டப்படிப்பு முறையில்) படித்த பெண் கணக்கீட்டாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி கணக்கீட்டாளர்களுக்கு ஒரே ஒரு முறை மட்டும் பணி மாற்றம் செய்து கணக்கீட்டாளர் பதவிக்கு இணையான பதவியான இளநிலை உதவியாளர் (நிர்வாகம் (அ) கணக்கு) வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும் நேர்முகத் தேர்வு/வாரிசு வேலை அடிப்படையில் பணியில் சேர்ந்த பணியாளர்கள் விருப்ப மாறுதல் அளிக்கும் பட்சத்தில், மேற்கண்ட பணியாளர்கள் குறைந்த பட்சம் 2 வருடங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என பார்வை (2)-ல் காணும் வாரிய செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) நேர்முகத் தேர்வு/வாரிசு வேலை அடிப்படையில் வாரியத்தில் பெண் கணக்கீட்டாளராக பணியில் சேர்ந்த பணியாளர்கள் 40 வயது பூர்த்தியடையாத நிலையிலும் மற்றும் ஒரு வருட காலம் பூர்த்தியடையாத நிலையில் கருணை அடிப்படையில் பெண் கணக்கீட்டாளராக வாரியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள பல நபர்களும் இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவி மாற்றம் கோரும் நிலை உருவாகி உள்ளதால் வாரிய செயல்முறை ஆணை எண்.110, நாள் 3.11.18-ன் படி ஏற்றதக்கதல்ல. மேற்கண்ட ஆணைகளின் படி இனி வருங்காலங்களில் வாரியத்தில் ஈர்ப்பு செய்யப்படும் பணியாளர்கள் 40 வயது முடிந்தும் மற்றும் இரண்டு வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டாளர்களுக்கு இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவி மாற்றம் கோரப்படும் கருத்துருக்களை மட்டும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படி இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

-2

4) இனி வரும் காலங்களில் மேற்கண்ட நிபந்தனைக்களை பூர்த்தி செய்யாத கணக்கீட்டாளரின் கருத்துருக்களை மேல்நடவடிக்கைக்கு அனுப்புவதினை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

**ரா.சுனில்**

தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,

<u>பெறுநர்</u>

அனைத்து மேற்பார்வை பொறியாளர்/மின் பகிர்மான வட்டம்.

<u>நகல்:</u>- அனைத்து தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/மண்டலம்.

<u>நகல்:</u>- ஜி.59 பிரிவு/நிர்வாகக் கிளை/சென்னை-2.

<u>நகல்:</u>- இருப்புக் கோப்பு.

// உண்மை நகல் // உத்தரவின்படி // அனுப்பப்படுகிறது//

22/10/24

கண்காணிப்பாளர்